HFE Heilpädagogische Früherziehung Bülach/Dielsdorf, Lindenhofstrasse 6, 8180 Bülach, Tel. 044 860 63 31, Fax 044 860 02 37, hfeb@hlf-fruehbereich.ch
HLF Heilpädagogik und Logopädie im Frühbereich: LPB Logopädische Praxis Bülach, HFE Heilpädagogische Früherziehung Schaffhausen, LFS Logopädische Frühberatung Schaffhausen, www.hlf-fruehbereich.ch

# முன்கூட்டிய சிறப்புக்கல்வி

**முன்கூட்டிய சிறப்புக்கல்வி பிறந்ததிலிருந்து மழலையர்பள்ளியின் இரண்டாவது ஆண்டு இறுதிவரை வளர்ச்சிக் குறைபாடுள்ள குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களை இலக்காகக் கொண்டது.**

**முன்கூட்டிய சிறப்புக்கல்வி எப்போது வெளிக்காட்டுகிறது ?**

குழந்தை வளர்ச்சிக்குறைபாடுகளை ,வளர்ச்சித்தாமதங்களை அல்லது இயலாமைகளை பின்வரும் பகுதிகளில் வெளிக்காட்டினால்:

-இயக்கத்தில்
-மொழியில்
-புலனுணர்வில
-தொடர்பில்
-விளையாட்டில்
-உணர்தல் மற்றும் அனுபவித்தலில்

**எங்கள் சலுகை உள்ளடக்குவது எதை?**

**முதல்ஆலோசனை**

உங்களுக்கு உங்கள் குழந்தையின் அபிவிருத்தி சம்பந்தமாகக் கேள்விகள் இருந்தால், பெற்றோர் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.முதல் கலந்தாய்வின்போது துறைசார்ந்த திட்டவட்டமான தெளிவுபடுத்தல் அர்த்தமுள்ளதாக இருக்குமா என பெற்றோருடன் விவாதிக்கப்படும்.

**கண்டறிதல்**

பெற்றோருடனான உரையாடல் மற்றும் திறந்த அதோடு கட்டமைக்கப்பட்ட விளையாட்டுச்சூழல்களில் அவதானிப்பு மேலும் தரப்படுத்தப்பட்ட சோதனைமுறைகளைப் பயன்படுத்தல் போன்றவற்றினூடாக நாங்கள் குழந்தையை அதன் வளர்ச்சியில்,அதன் ஆளுமையில்,அதன் பலங்கள் மற்றும் பலவீனங்களில் தெரிந்துகொள்வதுடன் மற்றும் அதன் வளர்ச்சிநிலையையும் கண்டறிய முடியும். நாங்கள் பெற்றோருடன் பெறுபேறுகளைப்பற்றி கலந்துரையாடுகிறோம் மேலும் அடுத்த நடவடிக்கைகள் பற்றித் திட்டமிடுகிறோம்.

**முன்னேற்றம்**

தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டுச்சூழல்களினூடாக நாங்கள் குழந்தையை அசைவில்,புலனுணர்வில்,மொழியில்,மற்றும் சமூகநடத்தையில் தனது புதிய திறமைகளை வெளிக்காட்டுவதற்குத் தூண்டுகிறோம்.நாங்கள் குழந்தைக்கு அதனது திறன்களை அன்றாட வாழக்கையைச் சமாளிப்பதில் பயன்படுத்த ஆதரவளிக்கின்றோம்,மற்றும் அதன் ஆளுமையையும் வலிமைப்படுத்துகிறோம்.நாங்கள் பெற்றோர் வீட்டில் ,அல்லது முன்கூட்டிய சிறப்புக்கல்விக்கான வளாகங்களில் தனிமுன்னேற்றுவிப்பு,அத்துடன் சிறுகுழுக்களாக முன்னேற்றுவிப்பு போன்றவற்றை வழங்குகிறோம்.

HFE

நாங்கள் மற்றைய துறைசார்ந்தவர்களுடனும் மற்றும் துறைசார்நத நிறுவனங்களுடனும் இணைந்து வேலைசெய்கிறோம்,எனவே முன்னேற்ற நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுவதோடு மற்றும் குழந்தை மற்றும் பெற்றோரினது தேவைகளில் பொருத்தம் ஏற்படவும் முடியும்.

**ஆலோசனை**

நாங்கள் பெற்றோரோடு குழந்தையின் வளர்ச்சிப்பிறழ்வு அல்லது நடத்தையில் இருந்து பெறப்பட்ட பிரச்சனைகளின் பெறுபேறுகள் பற்றி விவாதிக்கிறோம்,மற்றும் இணைந்து தீர்வுகளைத் தேடுகிறோம்.
மேலும் நாங்கள் பெற்றோர் மற்றும் தொடர்புடையவர்கள்,அவர்கள் குழந்தையை எவ்வாறு ஆதரிக்க முடியும் என வழிகாட்டுகிறோம்,எனவே குழந்தை தான் பெற்றுக்கொண்ட திறமைகளை அன்றாட வாழ்வில் பரிமாற்றம் செய்ய மற்றும் நிறுவ முடியும்.

பெற்றோருடன் ஒன்றாக இணைந்து நாங்கள் நிவாரணவாய்ப்புகளைத் தேடுகிறோம்,அதோடு அவர்களிற்கு குழந்தையின் விளையாட்டுக்குழுவிற்கு,குழந்தை பராமரிப்பு இடத்திற்கு அல்லது மழலையர் பள்ளிக்கு நுழைதல் சம்பந்தமான கேள்விகளில் ஆலோசனை கூறுகிறோம் .

**செலவீனங்களை ஏற்பவர் யார்?**

சூரிஹ் மாநிலத்தில் குடியிருப்புடனுள்ள பெற்றோருக்கு முன்கூட்டிய சிறப்புக்கல்வி இலவசமானது.